மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கோவில்பட்டி

அ.வ.எண். 150 /2021

வாதி தரப்பு சாட்சி வாக்குமூலம் வா.சா.1.

---

பெயர். - திரு.சுந்தரராஜ்.
த/பெ. - திரு.சங்கரப்ப நாயக்கர்
கிராமம் - முக்கூட்டுமலை
தொழில் - முன்னாள் இராணுவனத்தினர் ஓய்வு
தாலுகா - கோவில்பட்டி
வயது - 69

1872-ஆம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டத்தின்படி 2025-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 18-ஆம் நாள் இந்நீதிமன்ற உதவியாளரால் சத்தியப்பிரமாண வாக்குமூலம் செய்யப்பட்டு, நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டு, ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

முதல் விசாரணை.-

1) நான் இந்த வழக்கில் வாதி தரப்பு 1 வது சாட்சி ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை நிருபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். அதை வாதிகள் தரப்பில் ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

| | |
|---|---|
| 1 | 10.09.2007 ல் வாதியின் தாத்தா எழுதிக்கொடுத்த உயில் சப்ரி நகல் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.<br>(பிரதிவாதி தரப்பு ஆட்சேபனைக்குட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது). |
| 2 | 20.11.1909 வாதியின் தாத்தா கிரையம் பெற்ற பத்திரம் சப்ரி நகல் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 3 | 05.10.2020 ல் வாதியின் தகப்பனார் கழுகுமலை காவல் நிலையத்தில் புகார் கொடுத்தற்கான மனு ரசீது அசல் வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது |
| 4 | 29.12.2020 ல் வாதிக்கு வட்டாட்சியர் கொடுத்த அறிவிப்பு நகல் வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது |
| 5 | வழக்கிடை சொத்திற்கான புலப்படம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 6 | 11.03.2008 வெ.சங்கரப்ப நாயக்கர் இறப்பு சான்றிதழ் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது |
| 7 | 16.10.2020 ல் வாதி பெயரிலான நத்தம் நிலவரித்திட்ட துாய சிட்டா சான்றிட்ட நகல் வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது |
| 8 | வாதி பெயரிலான மின் கட்டண ரசீது எண்ணம் 1 கணினி பதிவிறக்க நகல் வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 9 | 01.09.2021 வாதி பெயரிலான வீட்டு வரி ரசீது எண்ணம் 2 சான்றிட்ட நகல் வா.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது |

பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

குறுக்கு விசாரணை - வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க வேறுதேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)C.கருப்பசாமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி,
18.09.2025.